# தி . த . கனகசுந்தரம்பிள்ளை - ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

திருகோணமலையின் புகழ்பெற்ற தமிழ் அறிஞர் தி. த. கனகசுந்தரம்பிள்ளை ஆவார். யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஆறுமுகநாவலர். மட்டக்களப்புக்கு ஒரு விபுலானந்தர். திருக்கோணமலைக்கு அவர்களின் வரிசையில் தி. த. கனகசுந்தரம்பிள்ளை ஆவார். திருக்கோணமலை மண்ணில் பிறந்து தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கிய வரலாற்றுக்கும் அரும் பெரும் தொண்டாற்றி, இந்தியாவில் சென்னையில் தனக்கென்று ஒரு அடையாளத்தையும், வரலாற்றுள் மறையா புகழையும் உருவாக்கிய ஒருவர் இவர்.

இவர் தனது பதினெட்டாவது வயதில் 1880 ஆம் ஆண்டு இந்தியாவின் சென்னைக்குச் சென்று கல்வி கற்றார். அங்கு செங்கல்வராய நாயக்கர் பள்ளி, பச்சையப்பா உயர்கல்வி, மாநிலக் கல்லூரி ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தார். அனைத்து தேர்வுகளிலும் சிறப்புர தோற்றி இவரது மதிப்பை உயர்த்திக் கொண்டார். ஆங்கில மொழியிலும் தனது கல்வி புலமையை பெற்றிருந்தார். தனது பிஏ படிப்பினை பூர்த்தி செய்து இந்தியாவில் தங்கி இருந்து சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அதன் பின் சிறிது காலம் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் தமிழ் பேராசிரியராக கடமை புரிந்தார். அந்த காலத்தில் தனது அறிவையும், இலக்கிய வளத்தையும் அதிகரித்துக் கொண்டார். பண்டைக் காவியங்கள் பல பாழடைந்து கிடப்பதைக் கண்டு அவற்றை மீள் புணர்பிக்க ஆர்வம் கொண்டு தொண்டாற்ற ஆரம்பித்தார். பல புலவர்களின் ஒத்துழைப்புடன், பல நூல்களை புதுப்பித்து வெளியிட்டார். குறிப்பாக கம்பராமாயணம் பாலகண்டத்திற்கு உரை எழுதி வெளியிட்டார். அவ்வாறே சுண்ணாகம் அ. குமாரசுவாமி பிள்ளை அவர்களுடன் சேர்ந்து "நம்பியகப் பெருமாள்" என்ற நூலுக்கு உரை எழுதினார்.

சென்னையில் இருந்த வித்துவான் இராசகோபால பிள்ளை அவர்களின் உதவியுடன் கம்பராமாயணத்தில் சில பாகங்களையும், வேறு சில நூல்களையும் மிக நுண்ணியதாக ஆராய்ந்து அறிந்தார்கள். மேலும் தொல்காப்பியத்தையும் சங்க காலத்தில் இலக்கியங்களையும் ஏற்று பிரதிகள் பலவற்றோடு ஒப்பு நோக்கிதாக நுண்ணியதாக

ஆராய்ந்து உள்ளனர். இவர் பிறர் பலர் இயற்றிய நூல்களுக்கு கைமாறு கருதாமல் நூலுரைகளையும், திருத்தங்களையும் கடிதம் வாயிலாக தெரிவித்து உதவிய ஒருவர் ஆவார். மேலும் சி. வை. தாமோதரம்பிள்ளை, திருவனந்த சுந்தரம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் போன்றோர் வெளியீடுகளுக்கு கனகசுந்தரம்பிள்ளை அவர்களின் உதவி இன்றி அமையாது ஆக இருந்துள்ளது. இவர் நீண்ட காலமாக சென்னை சர்வ கலாசாலை பரீட்சகர்களுள் ஒருவராய் இருந்தமையோடு, நான்கு வருட காலம் பரீட்சகர் சங்கத்துக்கு தலைவராகவும் இருந்துள்ளார். மதுரை தமிழ் சங்கத்து பரீட்சகர்களுள் ஒருவராகவும், சென்னை கிறிஸ்டியன் கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ் தலைமை புலவர் ஆகவும் இருந்துள்ளார். இவர் வெளியிட்ட பெருமை வாய்ந்த நூல்களில் ஒன்று, "ஈழ மண்டல தேவாரமும் திருப்புகழும்" என்பதாகும். இந்த நூலில் திருக்கோணமலை, திருக்கேதீஸ்வரம் பற்றிய தேவாரங்களும், திருப்பாசுரங்களும், திருப்புகழும் இடம் பெற்றுள்ளது. அத்தோடு இரு கேத்திரங்கள் பற்றியும், கதிர்காம ஸ்தலம் பற்றியும், அருணகிரிநாதர் இசை திருப்புகழ் பாடல்களும் இடம்பெற்றிருந்தன.

இத்தகைய ஆளுமை மிக்க ஐயா கனகசுந்தரம் பிள்ளை அவர்களை ஆவணப்படுத்தி அவர் தொடர்பான விடயங்களை பாதுகாத்தல் அவசியமாகும்

செயற்றிட்ட நோக்கம்

இச்செயற்றிட்டம் மூலம் தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணிகள் இவரால் வெளியிடப்பட்ட நூல்கள் என்பவற்றை ஆவணப்படுத்துவதோடு அவருடன் தொடர்புபட்ட நபர்களை இனங்கண்டு அவர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல் .

## எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

- தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களது படைப்புக்களை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்.
- தி. த. கனகசுந்தரம்பிள்ளை ஆற்றிய தமிழ்ப் பணிகளை செயற்றிட்டத்தில் இணைத்தல்.

## செயற்றிட்ட காலம்

ஒரு வருட காலப்பகுதிக்குள் தி. த. கனகசுந்தரம்பிள்ளை படைப்புக்கள் அவரது ஆக்கங்கள் அவரது சமூகப்பணி குறித்த விடயங்கள் மேலும் அவரது வரலாற்றோடு தொடர்புபட்ட அவரது பணிகளை இன்று வரை எடுத்துச் சென்றுகொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
[https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132](https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132)